**தலைப்பு 022 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 022- நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக உரிய வருடாந்த பொழிப்பறிக்கை 2024 ஏப்ரல் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந ்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத ்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள ் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல ் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் ் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய ்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணையாளர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) இன் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்புகளின் பிரகாரம் கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 1.6.1(ஆ) |

(ஆ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கடைசி நாள் திறைசேரி கணனி அச்சுத் தாளின் பிரகாரம், அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிற்கும் அத்திகதியில் உள்ளவாறான தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்கும் இடையில் ரூபா 36,757 ஆன விததியாசம் இருந்ததுடன் 2006 இற்கு முனனரே இருந்து. இந்த வித்தியாசம் கண்டுபிடிக்கப்பட்ட கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிற்கும் அத்திகதியில் உள்ளவாறான தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்கும் இடையில் ரூபா 36,357 ஆன விததியாசம் 2006 இற்கு முனனர் இருந்தே இருந்ததுடன் போதிய தரவுகள் இன்மையால் இந்த ஆண்டு சரிசெய்ய முடியாததிருந்ததுடன் எதிர்காரத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | விதியாசங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கணனி உபகரணங்களின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் திறைசேரி புத்தக்களில் மற்றும் திணைக்கள புத்தகங்களில் ரூபா 1,130,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதி மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு என்பன அதே திரண்ட தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முறைமையிலுள்ள தவறு காரணமாக, முன்னைய ஆண்டு இறுதியில் கணனி உபகரணங்களின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி பெறப்பட்டிருக்கவில்லை. இறுதியில் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பபட்டிருந்ததடன் இது திருத்தப்பட்டு பெறப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதி திறைசேரி அறிக்கை பிரகாரம் அந்நேரத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. இது 2023 ஆம் ஆண்டிற்கான சரியான மீதியாக பதிவதற்கு சாத்தியமற்றிருந்தது. | நிதி நஜலைமை கூற்றில் சரியான தொகைகள் பதியப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### 2.1.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன. .

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் பாதீட்டு மதிப்பீடுகள் சாத்தியமானளவு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டி | பாதீட்டு திணைக்களத்தால் எங்களுடைய அனுப்பப்பட்ட பாதீட்டின் பிரகாரம் மொத்த ஏற்பாடு ரூபா 30,655,000 ஆக மாத்திரம் இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் சரியாக மதிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் மீளாய்வாண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களிற்கான தேறிய ஏறபாடுகளை முறையே ரூபா 25,768,363 அல்லது 46 சதவீதம் மற்றும் ரூபா 129,500 அல்லது 43 சதவீதத்தில் இருந்தது. | | |
| (அ) | ஆளணி வேதனங்களில் மதிப்பிடப்பட்ட செலவினம் முன்னைய அண்டுடன் ஒப்பிடும் பொது 2022 மற்றும் 2023 ஆண்டுகளிற்காக முறையே 25 சதவீதம் மற்றும் 70 சதவீதத்தில் இருந்தது. ஆனால் மீளாய்வாண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்ட தொகையில் இருந்து ரூபா 26,340,000 அல்லது 53 சதவீதம் மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. சேமிப்பகள் இருந்தமைகாக காரணங்களாக வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் இடமாற்றம் / ஓய்வுபெறல் / பதவிவறிதாக்ல் என்பன கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | நாங்கள் 2023 ஆம் ஆண்டிற்கான ஆளணி வேதனஙகளிற்காக ரூபா 13,980,000 மாத்திரம் மதிப்பிடப்பட்டு பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. | செலவினங்களை சரியாக மதிப்பிடப்பட்டு வருடாந்த செலவின மதிப்பீடுகளை தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளிற்காக உள்நாட்டு பிரயாண செலவினங்களிற்கான மதிப்பிடப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 29 சதவீதம் மற்றும் 100 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஆனால் செலவினங்களை சரியான மதிப்பிடப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் மதிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 137,641 அல்லது 75 சதவீதம் சேமிப்பாக இருந்தது. | உள்நாட்டு பிரயாண செலவினங்களிற்காக ரூபா 110,000 மாத்திரம் பாதிடப்பட்டு பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. | செலவினங்களை சரியாக மதிப்பிடப்பட்டு வருடாந்த செலவின மதிப்பீடுகளை தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மேலதிக ஒதுக்கீடு காரணமா 13 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 48,976,800 ஆன தேறிய ஒதுக்கீட்டில் 38 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் மிகை ஏற்பாடுகள் இருந்ததுடன் 02 செலவின விடயங்களில் ரூபா 60,000 ஆன தொகை அல்லது தேறிய ஏற்பாட்டின் 44 | உடன்படிக்கை பிரகாரம், கட்டிட உரிமையாளரால் ஆண்டின் போது பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆணையாளர் உத்தியோகபூர்வ வாகனங்களை பயன் படுத்தியமையால் ஆண்டின் போது பிரயாணப் படிகளாக | செலவினங்களை சரியாக மதிப்பிடப்பட்டு வருடாந்த செலவின மதிப்பீடுகளை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் மற்றும் மூலதன செலவின விடயங்களில் ரூபா 300,000 ஆன தொகை அல்லது தேறிய ஏற்பாட்டின் 42 சதவீதம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | கோரிக்கை செய்திருக்கவில்லை. அச்சிடல் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு வேண்டியிருந்த பொதிலும் அச்சிடல் இயந்திரங்களின் கிரயம் அதிகரித்தமையால் ஏற்பாடுகள் போதாதிருந்தது. வேறு கொள்வனவற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காது விடின் மேலதிகமான ஏற்பாடுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் வெற்றிடங்கள் நிலவியமையால் ஏற்பாடுகள் பிரிக்கப்பட்டிருந்ததுடன் வரையறுத்த உத்தியோகத்தர் எண்ணிக்கையே உள்ளமையால் அவர்களுடைய தேவைகளின் அடிப்படையிலேயே பயிற்றுவிக்கப்படுகின்றனர். | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொறுப்புக்கள் அல்லது கடப்பாடுகள் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்காத போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 19,605 பொறுப்பு முன்னைய ஆண்டு செலவினமாக 2024 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது. திறைசேரியால் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் தீர்ப்பனவு உள்ளடக்கப் பட்டிருக்காததுடன் பொறுப்புக்கள் 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டது. | உரிய செலவின விடயத்தில் போதிய ஏற்பாடுகள் இன்மையால் ஏற்பாட்டில் மீகுதியாக இருக்கின்ற தொகை மாத்திமே செலவு வைக்கப்பட்டிரந்தது. ஆதலால், நி.பி 115 இன் பிரகாரம் ஏற்பாடுகளை விஞ்சி ஏற்பட்ட செலவினங்களிற்காக அனுமதி பெறல் செயற்பாட்டில் உள்ளன. | ஆண்டிற்கான சகல பொறுப்புகளும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

மாதிரிச் செவ்வை கணக்காய்வு ஒதுக்கீட்டின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| அவதானிப்புகள் | | | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| **(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | | |
| நிதிப்பிரமாணம் 260 மற்றும் 264 | 170,320 | ஒவ்வொரு கொடுப்பனவுகளிற்காகவும் கொடுப்பனவு பெறப்பட்ட நபரின் பெயருடையவரிடமிருந்து பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவற்றினைப் பெறாமல் உரிய தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது | கவனயீனத்தால் 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்கு உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய தொகையின் உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் விசாரிக்க வேண்டியிருந்ததும் 2023 சனவரி 01 இல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுமான 699 முறைப்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது முகவர்களுடைய சட்ட எல்லையின் கீழ் பெறப்பட்ட 978 முறைப்பாடுகள் உள்ளடங்கலாக 1,677 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் போது விராரணை செய்ய வேண்டிய | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டில் அதிகளவான முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அது 1537 ஆக இருந்தத. ஆனால், அவற்றில் 559 முறைப்பாடுகள் எங்களுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கவில்ல்லை. இந்த ஆண்டில் புள்ளிவிபர பகுப்பாய்வில் முறைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை தீர்மானிக்கப்பட்டது. | முறைப்பாடுகள் விரைவாக விசாரணை செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மொத்த முறைப்பாடுகளாகும். அவற்றில் 762 முறைப்பாடுகள மீளாய்வாண்டில் கையாளப்பட்டதுடன் மீளாய்வாண்டின் கடைசி நாளில் 915 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டியிருந்தது. | | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிக்கப்பட்ட பதவியணி 32 ஆக இருந்ததுடன் உள்ளபடியாக பதவியணி 19 ஆக இருந்ததுடன் 13 வெற்றிடங்ககள் நிலவியது. அனுமதிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் 41 சதவீதமாக இருந்தது. ஆலவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் (முறைப்பாடுகள்) பதவியும் 5 ஆண்டுகளிற்கு மேலாக வெற்றிடமாக இருந்தன. | பொது நிர்வாக அமைச்சு அலுவலகத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு திரும்பத்திரும்ப வேண்டியிருந்தது. ஆனால் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. 05 ஆண்டுகளிற்கு மேலாக நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இடமாற்றங்களின் கீழ் கடமைக்காக அலுவலகத்திற்கு வருகின்ற உத்தியயோகத்தர தகராறுகளிற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசிய பதிவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |